

கண்டோன்மெண்ட் நகர தி.மு.க. இளைஞர் அணி சார்பில் நகர அமைப்பாளர் சுனில்பால் ராஜ் தலைமையில் கண்டோன்மெண்டில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் விழா மற்றும் நாடு போற்றும் நான்காண்டு திராவிட மாடல் அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், பேச்சாளர்கள் தமிழ்சாதிக், கோகுல் ஆகியோர் கலந்துக்கொண்டு உரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். அருகில் பகுதி செயலாளர் த. ஜெயக்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், கண்டோன்மெண்ட் நகர மாணவர் அணி அமைப்பாளர் எம்.பி. மகேஷ் மற்றும் நகர நிர்வாகிகள் உள்ளனர்.

## தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

# கரூர் மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

**தி.மு.க. மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிவிப்பு**

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு தி.மு.க. மகளிர் தொண்டர் அணியின் **கரூர் மாநகர** அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**கரூர் மாவட்டம்**

**கரூர் மாநகரம்**

அமைப்பாளர் - பி. நிறைமதி 2/ஏ, ராமகிருஷ்ணபுரம் மெயின் ரோடு, செங்குந்தபுரம் அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் - 639001.

துணை அமைப்பாளர்கள் - 1) சி. தங்கமணி 18/இ, சங்கரன் பிள்ளை ஸ்டோர், பாலம்மாள்புரம், கரூர் அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் - 639001. 2) ல. ராதிகா 74,கே.எம்.சி. காலனி, பாலம்மாள்புரம், கரூர்அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர்- 639001. 3) எம். ஜெயலலிதா 301/1, வசந்தம் நகர், கணபதிபாளையம் வடக்கு, தாந்தோணிமலை அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் 639005.

4) பி. தனலட்சுமி 162/ஏ, முதல் கிழக்கு தெரு, திருமாநிலையூர், திருமாநிலையூர் அஞ்சல், கரூர் தாலுக்கா, கரூர் - 639003. 5) வி. சண்முகவள்ளி 60/3, அம்மன் நகர், கருப்பகவுண்டன் புதூர் கிழக்கு பசுபதி பாளையம் அஞ்சல், கரூர் - 639004.

**"அண்ணாஅறிவாலயம்"**
சென்னை - 18.
நாள் : 12-07-2025

**நாமக்கல் ப.இராணி**
செயலாளர்,
தி.மு.க. மகளிர் தொண்டர் அணி



விழுப்புரம் மாவட்டம், பெரியபாபு சமுத்திரம், அற்காட் லுத்திரன் திருச்சபை சார்பில் கட்டப்பட்டுள்ள தூய பவுல் ஆலயம் மற்றும் ALC மாற்றுத்திறனாளிகள் மறுவாழ்வு மையம் கட்டிடத்தை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் திறந்து வைத்து சிறப்புரை ஆற்றினார் இதில் சட்ட மன்ற உறுப்பினர் லட்சுமணன் பேராயர் பீட்டர் பால் தாமஸ், ஜெரால்டு, தவிஜிலா சத்யானந்தம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### தஞ்சாவூர் – பூதலூர் – மருதக்குடி கிராமத்தில் பிள்ளையார் குளத்தில் மூழ்கி

# உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோருக்கு தலா ரூ.3 லட்சம் நிதியுதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை, ஜூலை 13-**

**தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், மருதக்குடி கிராமத்தில் உள்ள பிள்ளையார் குளத்தில் மூழ்கி உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோர்களுக்கு ஆறுதல் மற்றும் நிதியுதவி வழங்கி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிவிப்பு வருமாறு:-**

தஞ்சாவூர் மாவட்டம், பூதலூர் வட்டம், மருதக்குடி கிராமம், திருவேங்கடஉடையான்பட்டியைச் சேர்ந்த சிறுவர்கள் செல்வன். ஜஸ்வந்த் (வயது 8) த/பெ.ஸ்ரீதரன், செல்வன். மாதவன் (வயது 10) த/பெ.கனகராஜ் மற்றும் செல்வன். பாலமுருகன் (வயது 10) த/பெ.செந்தில் ஆகிய மூவரும் 11.7.2025 அன்று மாலை சுமார் 4.30 மணியளவில் பள்ளிக்குச் சென்றுவிட்டு மருதக்குடி கிராமத்தில் உள்ள ஊரணி குளம் என்கிற பிள்ளையார் குளத்தில் குளிக்கச் சென்றபோது எதிர்பாராதவிதமாக நீரில் மூழ்கி உயிரிழந்தனர் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தேன்.


மேலும் இச்சம்பவத்தில், உயிரிழந்த சிறுவர்களின் பெற்றோர்களுக்கும் அவர்களது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதல்களையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவர்களது பெற்றோர்களுக்கு தலா மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

### செஞ்சிக்கோட்டை 'யுனெஸ்கோ' உலக பாரம்பரியச் சின்னமாக அறிவிப்பு!

# தமிழ்நாட்டுக்கும் - அதன் நிலைத்த பண்பாட்டு மரபுக்கும் பெருமிதத் தருணம் இது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப்பதிவு!



சென்னை, ஜூலை 13-

செஞ்சிக் கோட்டை இந்தியாவில் உள்ள மராட்டிய இராணுவத் தலங்களின் ஒரு பகுதியாக 'யுனெஸ்கோ' உலக பாரம்பரியச் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் "தமிழ்நாட்டுக்கும் - அதன் நிலைத்த பண்பாட்டு மரபுக்கும் பெருமிதத்தருணம், இது" என்று குறிப்பிட்டுள்ளார்.

முதல்வரின் வலைதளப்பதிவு வருமாறு:-

**'கிழக்கின் ட்ராய்' என அறியப்படும் செஞ்சிக்கோட்டை இந்தியாவில் உள்ள மராட்டிய இராணுவத் தலங்களின் ஒரு பகுதியாக யுனெஸ்கோ உலக பாரம்பரியச் சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.**

**சோழர் கோயில்கள், மாமல்ல புரம், நீலகிரி மலை இரயில், மேற்குத் தொடர்ச்சி மலை ஆகியவற்றின் வரிசையில் தமிழ்நாட்டில் இருந்து கம்பீரமான செஞ்சி மலைக் கோட்டை இப்பட்டியலில் தற்போது இணைந்துள்ளது.**

**தமிழ்நாட்டுக்கும் அதன் நிலைத்த பண்பாட்டு மரபுக்கும் பெருமிதத் தருணமாக இது அமைந்துள்ளது.**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் குறிப்பிட்டுள்ளார்.

### வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் – சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும்

# கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையத்தின் முன்னேற்றப் பணிகள்!

## அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு – அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் நேரில் ஆய்வு!

## பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் – ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினர்!

*சென்னை, ஜூலை 13-*

*வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையத்தின் முன்னேற்றப் பணிகளை அமைச்சர் பி.கே. சேகர்பாபு மற்றும் அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் ஆகியோர் நேரில் ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்தாரர்களை அறிவுறுத்தினர்.*

*சி.எம்.டி.ஏ. சார்பில் வேளச்சேரி சட்டமன்றத் தொகுதியில், திருவான்மியூர் பேருந்து நிலையம், அடையாரில் உள்ள இந்திராநகர் மற்றும் காந்தி நகர் ஆகிய 2 நூலகங்களை "முதல்வர் படைப்பகம்" அமைப்பதற்கான பணிகள் தொடங்கி வைக்கப் பட்டது.*

*முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி நேற்று (12.7.2025) சென்னை, வில்லிவாக்கம், சிவசக்தி நகரில், வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் கட்டப்பட்டு வரும் கொளத்தூர் வண்ண மீன்கள் வர்த்தக மையத்தின் (Kolathur Ornamental Fish Trade Centre) முன்னேற்றப் பணிகளை மீன்வளம், மீனவர் நலத்துறை மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர்அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும் சென்னை பெருநகர் வளர்ச்சிக்குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்தாரர்களை அறிவுறுத்தினர்.*

*இதனைத் தொடர்ந்து சி.எம்.டி.ஏ. சார்பில் வேளச்சேரி சட்டமன்ற தொகுதியில், திருவான்மியூர் பேருந்து நிலையம், அடையாரில் உள்ள இந்திராநகர் மற்றும் காந்தி நகர் ஆகிய 2 நூலகங்களை "முதல்வர் படைப்பகம்" அமைப்பதற்கான பணிகள் தொடங்கி வைக்கப்பட்டது.*

*இந்நிகழ்ச்சிகளில் வில்லிவாக்கம் சட்டமன்ற உறுப்பினர் வெற்றி அழகன், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சி.எம்.டி.ஏ. உறுப்பினர் செயலர்/ முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை செயலாளர் டாக்டர் ந.சுப்பையன், மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மாநகர போக்குவரத்து கழக மேலாண்மை இயக்குநர் டாக்டர் த.பிரபுசங்கர், சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர் எஸ்.ருத்ரமூர்த்தி, தலைமைப் பொறியாளர் மகாவிஷ்ணு, கண்காணிப்புப் பொறியாளர் ராஜமகேஷ்குமார், செயற்பொறியாளர் திருமதி.விஜயகுமாரி, மண்டலக் குழுத்தலைவர் கூ.பீ. ஜெயின், துணை இயக்குநர் (பொது நூலகம்) திருமதி. தனலஷ்மி, மாநகராட்சி மண்டல அலுவலர் சுந்தர் ராஜன், மாமன்ற உறுப்பினர் திருமதி.சுதா தீனதயாளன் மற்றும் துறைச் சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.*

### 3,935 இடங்களை நிரப்ப குரூப் 4 தேர்வு!

# 3 மாதத்தில் தேர்வு முடிவுகள் வெளியிடப்படும்!

## டி.என்.பி.எஸ்.சி. தலைவர் எஸ்.கே.பிரபாகர் தகவல்!

*சென்னை, ஜூலை 13 -*

*தமிழ்நாடு முழுவதும் 314 மையங்களில் நடைபெற்ற குரூப் 4 தேர்வு நிறைவடைந்தது. நேற்று நடைபெற்ற குரூப்4 தேர்வு முடிவுகள் 3 மாதங்களுக்குள் வெளியிடப்படும் என டி.என்.பி.எஸ்.சி. தலைவர் தெரிவித்துள்ளார்.*

*தமிழ்நாடு அரசின் பல் வேறு துறைகளில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர், தட்டச்சர், சுருக்கெழுத்து தட்டச்சர், நேர்முக உதவியாளர், கிராம நிர்வாக அலுவலர் உள்ளிட்ட 3 ஆயிரத்து 935 குரூப் 4 பணியிடங்களை நிரப்புவதற்கான எழுத்துத்தேர்வு, நேற்று காலை 9.30 மணிக்கு தொடங்கி, நண்பகல்12.30 மணி வரை நடைபெற்றது. தமிழ்நாட்டில் 38 மாவட்டங்களில் 314 தேர்வு மையங்கள், 13 லட்சத்து 89 ஆயிரத்து 738 பேர் குரூப்4 தேர்வை எழுதினர்.*

*சென்னை பிரசிடென்சி அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள தேர்வு மையத்தை டி.என்.பி.எஸ்.சி. தலைவர் பிரபாகர் பார்வையிட்டார்.*

*பின்னர், செய்தியாளர்களுக்கு பேட்டியளித்த அவர், டி.என்.பி.எஸ்.சி. குரூப் 4 தேர்வு முடிவுகள் 3 மாதங்களுக்குள் வெளியிடப்படும் எனத் தெரிவித்தார். மேலும், அரசுத் துறைகளில் இந்த ஆண்டில் மொத்தம் 10 ஆயிரம் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.*



பல்லாவரம் சட்டமன்ற தொகுதி தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 2 , 19 வது வார்டில் மாவட்ட கழகத் துணைச் செயலாளர் இ கருணாநிதி எம்.எல். ஏ தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 13 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட நியாய விலை கடையை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு துவக்கி வைத்தார் அப்பொழுது மண்டல தலைவர் பகுதி கழகச் செயலாளர் இ. ஜோசப் அண்ணாதுரை, பகுதி செயலாளர் இ. எஸ். பெர்னார்ட், மாமன்ற உறுப்பினர் பிருந்தா தேவி சிலம்பரசன், உதவி செயற்பொறியாளர் உதவி பொறியாளர் வட்ட கழகச் செயலாளர் வி. என். சிலம்பரசன் கழக நிர்வாகிகள் நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் ஆகியோர் உடன் இருந்தனர்

### எஸ்.ஜீவரத்தினம் தலைமை! எஸ்.முரளி-துரை பார்த்திபன்-கீதா முரளி முன்னிலை! என்.எஸ். பாலசுப்பிரமணியன் வரவேற்பு!

# மயிலை கிழக்கு சுற்றுச்சூழல் அணி சார்பில் மரக்கன்று நடும் விழா!

## மாவட்டச் செயலாளர் மயிலை தா.வேலு எம்.எல்.ஏ. தொடங்கி வைக்கிறார்!

*சென்னை,.ஜூலை.13,*

*முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாள் விழா திராவிட மாடல் ஆட்சியின் 5 ஆம் ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு சென்னை தென்மேற்கு மாவட்டம், மயிலை கிழக்குப் பகுதி சுற்றுச்சூழல் அணி சார்பில் அறுசுவை உணவு மற்றும் மரக்கன்று நடும் விழா இன்று (13.7.2025ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணிக்கு 2வது மெயின் ரோடு வள்ளீஸ்வர் தோட்டம், ஆர்.ஏ.புரத்தில் நடைபெறுகின்றது.*

*நிகழ்ச்சிக்கு மயிலை கிழக்குப் பகுதி சுற்றுச் சூழல் அணி பகுதி அமைப்பாளர் எஸ்.ஜீவரத்தினம் தலைமை வகிக்கிறார். கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் எஸ்.முரளி, 171 வது வட்டச் செயலாளர் துரை பார்த்திபன், 171 வது மாமன்ற உறுப்பினர் கீதா முரளி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.*

*சுற்றுச் சூழல் அணி மாவட்ட அமைப்பாளர் என்.எஸ்.பாலசுப்பிரமணியன், ம.மாரிச்சாமி, செந்தில் குமார், அய்யாவு, த.பத்மநாபன், கோ. வெங்கட்ராமன், லயன் பி.சக்திவேல், ஜி.ஹரி நாராயணன், மு.வேல்ராஜன், உ.துரைக்கண்ணு, கே.எல். சிவானந்தம், உ.யுவராஜ், டி.எஸ்.விஷ்ணுசங்கர், பி. சார்லி ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.*

*அறுசுவை உணவை வழங்கி மரக்கன்று நடும் நிகழ்ச்சியை மாவட்டச் செயலாளர் மயிலை தா.வேலு எம்.எல்.ஏ. துவக்கி வைக்கிறார்.*

*இந்நிகழ்ச்சியில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., மயிலை வேலு சம்மந்தம், மயிலைஆர்.பாலு, எஸ்.சரவணன், ஆர்.கதிரவன், சி.கணேஷ் பாண்டியன், சுசீலா துரைராஜ், ஹார்டுவேர்ஸ் எஸ்.குமார், மா.பா.தாமு, பி.எல்.தாஸ், எம்.கே.பி. மணிமாறன், அருண் ராமஜெயம், எஸ். வெங்கடேசன், ஏ.தாஸ், மா.பா. அன்பு, அ.தவநேசன், வி.வெற்றிவேல், கோ.கண்ணன், பா.பொன்னுசாமி, டி.ராஜவேலு, சீ.கிருஷ்ணமூர்த்தி, எஸ். ஆர்.ராஜாசுரேஷ்குமார், வே.கார்த்திக், டி.ஜெகதீஷ் பாபு, எம்.பிரவீன்பாபு, ஜான்பிரிட்டோ, எல். ராணி சுந்தர், ரகு, மா. டில்லி, எம்.எஸ்.டி.மணிமாறன், எஸ்.சாந்தி, ஆர்.மணிகண்டன், ஏ.சிவா மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.*

*ஆர்.கே. முருகன், இ. தணிகாசலம், எஸ்.பிரசாந்த், தமின், பெனிக்ஸ், மகிமை லூர்துசாமி, மணிகண்டன், சந்துரு, அப்துல் லத்திப் , சுகுமார் ஆகியோர் நன்றிகூறுகின்றனர்.*

*நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை பகுதி சுற்றுச் சூழல் அணி அமைப்பாளர் எஸ். ஜீவரத்தினம் செய்துள்ளார்.*



சென்னை, எழும்பூர், கெங்குரெட்டி தெரு, பிரசிடென்சி பெண்கள் மேல்நிலைப் பள்ளி மையத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடைபெறும் ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு IV (தொகுதி IV பணிகள்) தேர்வினை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர் எஸ். கே. பிரபாகர் நேற்று (12.07.2025), நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.